DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**
PROSECUTION WITNESS No.9

| | |
|---|---|
| Name | : **பிரகாஷ்.** |
| Father's Name | : **ராஜேந்திரன்** |
| Age | :61 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 15th day of September, 2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் 1986 ம் வருடம் இரண்டாம் நிலைக் காவலராக பணியில் சேர்ந்தேன். சென்னை பணியிடை பயிற்சி மையம், புதுப்பேட்டை சென்னை –2 என்ற பிரிவில் 30.06.2025 ம் தேதியன்று உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். முதலாவது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிபு ஆய்வாளராக பணிபுரிந்தார். 2வது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிவு காவலராக பணிபுரிந்தார். 3வது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிவில் காவலராக பணிபுரிந்தார். 2011 ஆகஸ்ட் முதல் 2013 ஆகஸ்ட் வரை கே7, ஐசிப் காவல் நிலைய குற்றப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகவும் மற்றும் நிலைய எழுத்தராகவும் பணிபுரிந்தேன். என்னுடைய நிலைய எழுத்தர் பணியில் தினமும் காலை 9 மணிக்கு

நிலையம் ஆஜராகி இரவு 8.30 மணியளவில் ஓய்விற்கு சென்றுவிடுவேன். கடந்த 11.01.2012 அன்று வழக்கம் போல் காலை 9 மணிக்கு நிலையம் ஆஜராகி என்னுடைய அன்றாட நிலைய எழுத்தர் பணியை முடித்து இரவு 8.30 மணியளவில் ஓய்விற்கு சென்றேன். 12.01.202 அன்று வழக்கம் போல், காலை 9 மணிக்கு நிலையம் ஆஜராகி என்னுடைய அன்றாட நிலைய எழுத்தர் பணியை முடித்து இரவு 8.30 மணியளவில் நான் ஓய்விற்கு செல்கிறேன் என்று கூறிவிட்டு செல்லும்போது ஆய்வாளர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும், அதனால் காலையில் சீக்கிரம் வந்துவிடுங்கள் என்று கூறினார். எனவே, நான் 13.01.2012 அன்று காலை 8 மணிக்கு நிலையம் ஆஜராகி ஆய்வாளர் அவர்கள் என்னிடம் கொடுத்த புகார் மனுவை பெற்று கே 7, ஐசிப் குற்ற எண்.24/2012 சட்டப்பிரிவுகள் 420, 392 இ.த.ச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். அதன்பிறகு, முதல் தகவல் அறிக்கையை ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன், அதன்பிறகு ஆய்வாளர் அவர்கள் இந்த வழக்கு சம்பந்தமான ஆவணங்களை தயார் செய்யுமாறு கூறினார், அவர் அறிவுறுத்தலின்பேரில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தும் மற்றும் தினேஷ், காஞ்சனா ஆகியோர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தும் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன், அன்று மதியம் சுமார் 3 மணியளவில் ஆய்வாளர் அவர்கள் பார்ட்டி சகிதம் வழக்கில் சம்பந்தப்பட்ட செல்போன்களை  கைப்பற்ற செல்வதாக கூறிச் சென்றார். இரவு சுமார் 8.30 மணியளவில் நான் ஆய்வாளரிடம் தகவல் தெரிவித்து ஓய்வில் செல்வதாக கூற, அதற்கு ஆய்வாளர் Computer Operator குமரன் என்பவரை நிலைத்திற்கு வரும்படி தகவல் தெரிவிக்க சொன்னார், நானும் அவரிடம் தகவல் தெரிவித்துவிட்டு ஓய்வில் சென்றுவிட்டேன். 14.01.2012 அன்று வழக்கம் போல் காலை 9 மணிக்கு நான் நிலையம் ஆஜரான போது

ஆய்வாளரின் பார்வைக்கு எதிரி நித்யராஜ் என்பவது ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்களும் இருந்தது. அதன் பின்பு, மதியம் சுமார் 3 மணியளவில் உதவி ஆய்வாளர் அண்ணாமலை, சிறப்பு உதவி ஆய்வாளர் ஜோசப் ஆகியோர்கள் சகிதம் ஆய்வாளர் அவர்கள் எதிரி நித்யராஜை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய அழைத்து சென்றார்கள். 16.01.2012 அன்று நான் வழக்கம் போல் காவல் நிலையத்தில் ஆஜராகி நிலைய எழுத்தர் பணியிலிருந்த போது மதியம் சுமார் 12.30, 1.00 மணியளவில் புழல் சிறையிலிருந்து மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது எதிரி நித்யராஜ் இறந்து விட்டதாக புழல் சிறை காவலர்கள் மூலம் தகவல் கேள்விபட்டேன். இது சம்பந்தமாக 26.10.2022 CBCID காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தார், நான் நடந்த விவரங்களை கூறினேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

12.01.2012 அன்று இரவு 11.30 மணியளவில் நிலையம் வந்து தினேஷ் என்பவர் புகார் அளித்துள்ளார், அதை ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்துள்ளார். எ.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிகாரிகள் கூறியதன் அடிப்படையில் அவற்றை நான் எழுதியுள்ளேன் என்றால் சரிதான். 12.01.2012 அன்று இரவு 11.30 மணியளவில் புகார் கொடுத்ததை நான் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். 13.01.2012 அன்று இரவு 11.30 மணிக்கு நடந்த விவரங்களை நான் 14.01.2012 அன்று எழுதியுள்ளேன், இரவு 11.30 மணியளவில் நான் நிலைய அலுவலலில் இல்லை, எனவே மறுநாள் எழுதினேன். 14.01.2012 அன்று காலை எதிரி நித்யராஜ் காவல் நிலையத்தில் இருந்தார் என்றால் சரிதான். எதிரி நித்யராஜை 14.01.2012 அன்றுதான் முதன்முதலில் பார்த்தேன் என்றால் சரிதான். 14.01.2012

அன்று 16.00 மணியளவில் எதிரியை உதவி ஆய்வாளர் அண்ணாமலை, சிறப்பு உதவி ஆய்வாளர் ஜோசப் மற்றும் ஆய்வாளர் ஆகியோர்கள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த ஐந்தாவது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றனர். சுற்றுக் காவல் பதிவேடு என்பதை காவல் நிலையத்திற்கு ஒன்றுதான் இருக்கும் என்றால் சரிதான். சுற்றுக் காவல் செல்லும் அலுவலர் கையில் ஒரு பொதுநாட்குறிப்பு இருக்கும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சுற்றுக் காவல் செல்லும் அலுவலர்கள் கைது செய்யப்பட்ட நபர்களை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தால் பாராவசம் ஒப்படைத்த பிறகு தான் சட்டம்ஒழுங்கு, குற்றப்பிரிவு என்று பிரிப்பார்கள் என்றால் அது போன்ற நடைமுறை இல்லை, நேரடியாக அந்தந்த பிரிவிடம் ஒப்படைப்பார்கள். சுற்றுக் காவல் பதிவேடு எனக்கு சம்பந்தப்பட்டதல்ல, அது குறிப்பிட்டுள்ள பதிவுகள் எனக்கு தெரியாது. 14.01.2012 அன்று காலை 7 மணிக்கு எதிரி நித்யராஜை வழக்கு சம்பந்தப்பட்ட சொத்துகளை கைப்பற்றுவதற்காக ஆய்வாளர் அழைத்து சென்றதாக சுற்றுக் காவல் பதிவேட்டில் பதிவுகள் உள்ளது, பின்னர் 11.30 மணியளவில் எதிரியை மீண்டும் பாரா வசம் ஒப்படைத்ததாக பதிவுள்ளது என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு, குற்றப்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு பொதுமக்கள் புகார் கொடுக்க காலை 7 மணி அளவிலிருந்தே வருவார்கள் என்றாலும் சுமாராக 10, 15 பேர்கள் இருப்பார்கள் என்றால் சரியல்ல, நான்கைந்து பேர்கள் தான் இருப்பார்கள், பின்னர் நேரம் ஆகஆக அதிகாரிகளை சந்திக்கவும், புகார்களை கொடுக்கவும் குறைகளை சொல்லவும் பொதுமக்கள் வருவார்கள் என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையம் மத்திய அரசுக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வந்ததா அல்லது தனியார் கட்டிடத்தில் இயங்கி வந்தா என்பது எனக்கு தெரியாது.

2012 வாக்கில் நிலையத்திலிருந்த லாக்கப்பை பொருட்கள் வைக்கும் அறையாக மாற்றி விட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 14.01.2012 அன்று நான் நித்யாவை பார்த்தபோது அவரது கைகள் மற்றும் கால்களில் கட்டுகள் இருந்தன என்றால் அது எனக்கு சரியாக ஞாபகமில்லை. தினேஷ், நித்யாவை 13.01.2012 அன்று இரவு 11.30 மணியளவில் ஒப்படைத்ததாக போலீசார் கூறினார்களா என்றால் என்னிடம் அதுபற்றி யாரும் கூறவில்லை.

**<u>மறுவிசாரணை</u>** :– இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**

PROSECUTION WITNESS No.10

Name : குமரன்

Father's Name : **தெட்சிணா மூர்த்தி**

Age : 47

Address :

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 15th day of September, 2025.

---

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது, கே–2, அயனாவரம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் சிறப்பு உதவாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். முதலாவது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிபு ஆய்வாளராக பணிபுரிந்தார். 2 வது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிவு காவலராக பணிபுரிந்தார். 3 வது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிவில் காவலராக பணிபுரிந்தார். நான் கடந்த 1999 ல் இரண்டாம் நிலைக் காவலராக தமிழக சிறப்பு காவல் படை மற்றும் ஆய்தப்படையில் பணிபுரிந்த பிறகு, 2011 ன் இறுதியில் கே7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிவில் பணிசேர்க்கை செய்தேன். அங்கு நீதிமன்ற அலுவலும் கணினி அலுவலலும் பார்த்து வந்தேன். வழக்கமாக காலை 9 மணிக்கு நிலையம் வந்து வழக்கு கோப்புகளை எடுத்துக் கொண்டு

ஐந்தாவது பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சென்று நிலைய சம்பந்தப்பட்ட வழக்குகளின் பணிகளை மேற்கொள்வேன், நீதிமன்ற அலுவல் முடிந்ததும் நிலைய எழுத்தருக்கும், ஆய்வாளருக்கும் அன்றைய நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து தகவல் தெரிவித்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிடுவேன், கணினி அலுவல் இருந்தால் நிலையம் வருவேன். கடந்த 13.01.2012 அன்று நிலைய எழுத்தர் திரு.பிரகாஷ் அவர்கள் நிலைய அலுவல் சம்பந்தமாக காவல்நிலையம் வரும்படி கூறினார். நான் செல்லும்போது இரவு 11.30 அல்லது 12.00 மணி இருக்கும், ஆய்வாளர் பின்னால் பெயர் கேட்டு தெரிந்த நித்யராஜ் என்பவரை விசாரித்துகொண்டிருந்தார், இரண்டு நபர்கள் அவர்கள் அருகே நின்று கொண்டிருந்தார்கள். எதிரி சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தை என்னை கணினியில் தட்டச்சு செய்ய சொன்னார்கள், நான் அதை தட்டச்சு செய்தேன், முடிந்த பிறகு அதை பிரிண்ட் எடுத்து கொடுக்க சொன்னார்கள். நான் பிரிண்ட் எடுத்து கொடுத்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன், மறுநாள் காலை 11.00 மணியளவில் நிலையம் வந்து காவல் அடைப்பு அறிக்கை தயார் செய்ய சொன்னார்கள், நான் அதை தயாரித்து கொடுத்தேன். PSR(Prisoner Search Register) தயாரிக்க சொன்னார்கள், அதையும் தயாரித்து கொடுத்தேன், அதன்பிறகு என்னை நீதிமனற்த்திற்கு அனுப்பி ரிமாண்ட் இருப்பதாக சொல்ல சொன்னார்கள். சுமார் 2 மணியளவில் நான் நீதிமன்றம் சென்று எதிரியை அடைப்புக் காவலில் வைக்க ஆஜர் படுத்துவதற்காக காத்திருந்தேன், சுமார் மாலை 4.30, 5 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜோசப், உதவி ஆய்வாளர் அண்ணாமலை, ஆய்வாளர் ராமலிங்கம் ஆகியோர்கள் எதிரி நித்யாவை ஆஜர் செய்து ரிமாண்ட் உத்தரவு பெற்று புழல் சிறைக்கு எடுத்துச் சென்றார்கள், அத்தோடு நானும் புறப்பட்டுவிட்டேன். இரண்டு நாட்கள்

கழித்து மாலை புழல் மத்திய சிறையிலிருந்து மருத்துவமனை செல்லும் வழியில் எதிரி நித்யா இறந்து விட்டதாக கேள்விபட்டேன். இது சம்பந்தமாக 26.10.2022 அன்று என்னை CBCID காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:—**</u>

எதிரி நித்யாவை நீதிமன்றத்தில் அடைப்புக்காவலுக்காக முன்னிலைப்படுத்திய போது குற்றவியல் நீதித்துறை நடுவர் ஏதேனும் துன்புறுத்தல் இருந்ததா என்று வினவிய போது எதிரி இல்லை என்றுதான் கூறினார்.

<u>**மறுவிசாரணை**</u> :— இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**
PROSECUTION WITNESS No.11

| | |
|---|---|
| Name | : பாண்டியன் |
| Father's Name | : ராமையா |
| Age | : 53 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 15th day of September, 2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது, எண். 153, C.K. தெரு, அயனாவரம் சென்னை – 23 என்ற முகவரியல் வசித்து வருகிறேன். நான் தற்போது ஆசான் பள்ளியில் கேன்டீனில் வேலை பார்த்து வருகிறேன். நான் 2010 முதல் 2015 வரை அயனாவரம் வாட்டர்டேங்க் ரோட்டில் Rockey மொபைல் ஷாப் என்ற பெயரில் செல்போன்கள் பழுதுபார்க்கும் மற்றும் ரீசார்ஜ் செய்யும் கடைவைத்து நடத்தி வந்தேன். 14.01.2012 அன்று ஐசிப் காவல் நிலைய ஆய்வாளர் என்னிடம் செல்போனை பழுது பார்க்க கொடுத்த நித்யராஜை அழைத்து வந்தார்கள், அவர் என்னிடம் பழுது பார்க்க கொடுத்த மூன்று செல்போன்களை என்னிடமிருந்து கைப்பற்றினார்கள். இது சம்பந்தமாக என்னை ஐசிப் போலீசார் விசாரிக்கவில்லை. எழும்பூர் ஆணையகரத்திலிருந்து என்னை அழைத்து வாக்குமூலம் வாங்கினார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலீசார் என்னை விசாரித்த போது எதிரி நித்யராஜ் அடிக்கடி என் கடைக்கு வந்து வேறுவேறு செல்போன்களை பழுது பார்க்க கொடுப்பார், ரீசார்ஜ் செய்வார் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். பழுது பார்த்து கொடுப்பவர்களுக்கு ரசீது கொடுக்கும் வழக்கம் உள்ளதா என்றால் இல்லை. கடை நடத்த எனக்கு போலீஸ் லைசென்ஸ் இருந்ததா என்றால் இல்லை. செல்போனை பழுது பார்க்க கொடுக்கும்போது அதை நான் அவரது பெயரையோ செல்போன் எண்ணையோ குறித்து வைத்துக் கொள்வேனா என்றால் இல்லை. போலீசார் மூன்று செல்போன்களை கைப்பற்றிய போது நான் அதற்கு அத்தாட்சி எதுவும் பெற்றுக் கொண்டேனா என்றால் இல்லை. நான் திருட்டு பொருட்களை வாங்கி வைத்துக் கொள்வதாலும், பழுது பார்ப்பதாலும், ரீசார்ஜ் செய்வதாலும் எந்த ஆவணங்களும் வைத்துக் கொள்வதில்லை என்றால் சரியல்ல. ஐசிப் போலீசார் நித்யராஜை அழைத்து வந்த போது இரண்டு சாட்சிகளை அழைத்து வந்தார்களா என்றால் இல்லை. நான் நித்யராஜ் சொல்ல சொல்ல எடுத்துக் கொடுத்தேனா என்றால் இல்லை, ஆய்வாளர் அவர் சர்வீஸ் செய்ய கொடுத்த போன்களை கொடுக்கும்படி கேட்டார், நான் அவற்றை கொடுத்தேன். அவரோடு இரண்டு சாட்சிகள் வந்தார்கள் என்றாலும் நான் CBCID போலீசார் கூறி வரவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** :– இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |